பூரம் திருவிழாவை முன்னிட்டு

வடக்குநாதர் கோயில் மைதானத்தில் குருவாயூர் தேவஸ்தான கண்காட்சி

பாலக்காடு, ஏப்.21: கேரளாவில் பிரசித்திப்பெற்ற திருச்சூர் பூரம் திருவிழாவையொட்டி வடக்குநாதர் கோயில் மைதானத்தில் கண்காட்சி நடைபெறுகிறது. இந்த கண்காட்சியில் குருவாயூர் தேவஸ்தானத்தின் காட்சியும் இடம்பெற்றுள்ளது.

குருவாயூர் கோயிலை நினைவுபடுத்தும் வகையில் கிழக்குக்கோபுர வாயிலின் முன்பு பக்தர்களை வரவேற்கும் விதமாக கருடனின் உருவச்சிலை கண்காட்சியின் முகப்பு வாயிலிலும் இடம்பெற்றது.

இதனை பார்த்தவுடன் அனைத்து பார்வையாளர்களுக்கும் குருவாயூர் கோயில் நினைவுக்கு வந்துவிடும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. 15 அடி நீளமும், அதற்கு தகுந்தாற் போன்று உயரமும் கொண்டதாக கருடன் சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது.

தற்போது பக்தர்களின் செல்பி பாயிண்டாக மாறியுள்ளது. திருச்சூர் பூரம் வடக்குநாதர் கோயில் மைதானத்தில் குருவாயூர் கோவில் கண்காட்சி கூடத்தை தேவஸ்தான சேர்மன் டாக்டர் வி.கே. விஜயன் குத்துவிளக்கு ஏற்றி வைத்து திறந்து வைத்தார்.

▶ திருச்சூர் பூரம் திருவிழாவையொட்டி வடக்குநாதர் கோயில் மைதானத்தில் கண்காட்சி நடைபெற்று வருகிறது. முகப்பு பகுதியில், 15 அடி நீளமும், அதற்கு தகுந்தாற் போன்று உயரமும் கொண்டதாக கருடன் சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், தேவஸ்தான நிர்வாகக்குழு உறுப்பினர் மனோஜ் தலைமை வகித்தார். திருச்சூர் பூரம் கண்காட்சி கமிட்டி தலைவர் ரவீந்திரநாத், துணை தலைவர் டாக்டர் பாலகோபால், செயலாளர் ரவிக்குமார் ஆகியோர் உட்பட முக்கிய பிரமுகர்கள், தேவஸ்தான ஊழியர்கள் ஆகியோர் பங்கேற்றனர். கண்காட்சியில் குருவாயூர் தேவஸ்தானத்தின் சுவர் சித்திரங்கள், யானைகளின் உருவ பொம்மைகள், கைவினை பொருட்கள், கிருஷ்ணர் உருவச்சிலைகள், ஆகியவை உட்பட ஏராளமான கண்காட்சி பொருட்கள் இடம் பிடித்துள்ளது. இதனை பார்வையாளர்கள் ஆர்வத்துடன் பார்த்து வாங்கியும் சென்றும் உள்ளனர்.

பள்ளி ஆசிரியர்கள் அமைப்பு சார்பில் போதை ஒழிப்பு விழிப்புணர்வு பிரச்சாரம்

பாலக்காடு, ஏப்.21: அனைத்து கேரள பள்ளி ஆசிரியர்கள் அமைப்பு பாலக்காடு மாவட்ட கமிட்டி சார்பில் போதை ஒழிப்பு விழிப்புணர்வு பிரச்சாரம் நடைபெற்றது.

பாலக்காடு இந்திரா காந்தி ஸ்டேடியம் அருகே மாவட்ட அளவில் பிரச்சாரத்தை மாநில செயலாளர் வினோத் தொடங்கி வைத்து பேசினார். அவர் பேசியதாவது:

கேரளாவில் அதிகளவில் வாலிபர்கள், மாணவர்கள் மற்றும் வெளி மாநில தொழிலாளர்கள் போதைப்பொருட்களை வாங்கி பயன்படுத்தி வருகின்றனர். இதனால் மாணவர்களிடையே பல்வேறு இடங்களில் மோதல் ஏற்பட்டு மாணவர்கள் கொலை வரை நடந்துள்ளது. மாணவர்கள் போதைக்கு அடிமையாக மல்பெற்றோர்களும், ஆசிரியர்களும் பார்த்து கொள்ள வேண்டும். அதனால் ஏற்படும் பின் விளைவுகள் குறித்து மாணவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். இவ்வாறு மாநில செயலாளர் வினோத் பேசினார். பாலக்காடு மாவட்ட தலைவர் ரணதிவே தலைமை வகித்தார். மாநில துணை தலைவர் ஜோதி, மாநில கமிட்டி உறுப்பினர்களான உன்னிகிருஷ்ணப்பிள்ளை, தினகரன், மாநில கவுன்சில் உறுப்பினர் சுரேந்திரன், ஷாஜீவ், சுபஸ்ரீ, பேபி, பிஜூ, அப்பாஸ், செந்தில் குமார், ஷமீல் ஆகியோர் பேசினர். முன்னதாக மாவட்ட செயலாளர் சதீஷ்மோன் வரவேற்றார், முடிவில் ஜெயப்பிரகாஷ் நன்றி கூறினார்.

▶ அனைத்து கேரள பள்ளி ஆசிரியர்கள் அமைப்பு பாலக்காடு மாவட்ட கமிட்டி சார்பில் போதை ஒழிப்பு விழிப்புணர்வு பிரச்சாரம் நடைபெற்றது.

கோத்தகிரியில்

பஞ்சமுக ஆஞ்சநேயர் கோயில் மகா கும்பாபிஷேக விழா

கோத்தகிரி, ஏப்.21: கோத்தகிரி டானிங்டன் பகுதியில் பஞ்சமுக ஆஞ்சநேயர் கோயில் புதிதாக அமைந்துள்ளது.

கடந்த புதன்கிழமை கும்பாபிஷேக கொடியேற்ற விழா நடைபெற்றது. தொடர்ந்து, மகா கும்பாபிஷேக விழா நடைபெறும் நிலையில், நேற்று முன்தினம் விநாயகர் கோயிலில் இருந்து பஞ்சமுக ஆஞ்சநேயருக்கு மங்கல வாத்திய முழங்க புண்ணிய தீர்த்தம், முளைப்பாரி, ஆஞ்சநேயருக்கு சீதனம் எடுத்து வருதல் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் பொது மக்கள் கலந்து கொண்டு தங்களின் வேண்டுதல் நிறைவேற சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு, புண்ணிய தீர்த்தம், முளைப்பாரி, கலசம், கும்பம் ஆகியவற்றை சீதனமாக கொண்டு வந்தனர். தொடர்ந்து வேத யாகமங்கள் முழங்க யாகசாலை பூஜைகள், மகா தீபாராதனை நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து நேற்று காலை நெல்லை கண்ணன், சாந்தி ராமு, இட்டக்கல் போஜராஜன் தலைமையில், அமுதம் பாபு, ஜெகதீஷ், அணில் குமார், ரமேஷ் குமார் முன்னிலையில் விஸ்வ சேனா வழிபாடு, மகா சங்கல்பம், யாகசாலை வேத பாராயணம், நாடி சந்தானம் உயிரூட்டுதல், மூலிகையினால் யாகம், தீபாராதனை, கடம் புறப்பாடு நடைபெற்ற பின் மதுரை ஆதீனம் முன்னிலையில் மகா கும்பாபிஷேகம் பஞ்சமுக ஆஞ்சநேயர் கோயிலில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த மகா கும்பாபிஷேக விழாவில் கோத்தகிரி அதன் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு தங்களின் வேண்டுதல் நிறைவேற சிறப்பு பூஜைகள் செய்து வழிபட்டனர்.

▶ கோத்தகிரியில் பஞ்சமுக ஆஞ்சநேயர் கோயில் மகா கும்பாபிஷேக விழா வெகு விமர்சையாக நடைபெற்றது.

கடலில் மூழ்கி 3 வயது சிறுவன் பரிதாப பலி

பாலக்காடு, ஏப்.21: கொங்கல்லூர் அருகே கய்யமங்கலம் பகுதியில் கடலில் 3 வயது சிறுவன் மூழ்கி பலியான சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

கேரள மாநிலம், திருச்சூர் மாவட்டம் கொடுங்கல்லூரை அடுத்த முற்றிச்சூரை சேர்ந்த நாஷர், ஷாகிரா தம்பதியருக்கு 3 வயதில் அஷ்பாக் என்னும் மகனும் 4 வயதில் மூத்த மகன் என 2 மகன்கள் உள்ளனர். 2 குழந்தைகளுடன் கய்யமங்கலம் கம்பனிக்கடவு பகுதியிலுள்ள உறவினர் வீட்டிற்கு தம்பதியர் விருந்துக்கு சென்றுள்ளனர். அங்கு மூத்த மகன் மற்றும் அஷ்பாக் ஆகியோர் விளையாடி கொண்டு இருந்துள்ளனர்.

இந்நிலையில் அண்ணன் பக்கத்து வீட்டிற்கு செல்லும் போது, பின்தொடர்ந்து சென்ற சிறுவன் அஷ்பாக் அருகிலுள்ள கடற்கரைக்கு தனியாக சென்றுள்ளான்.

இதனை கவனிக்காமல் இருந்த பெற்றோர், குழந்தைகளை காணவில்லை என தேடி பார்த்துள்ளனர். அப்போது கடல் அலை அடித்து தண்ணீரில் மூழ்கி, கரை ஒதுங்கிய சிறுவன் அஷ்பாக்கை பார்த்து மீனவர்கள் மீட்டனர். பின்னர் முதலுதவி சிகிச்சை அளித்து பெற்றோருடன் அருகிலுள்ள தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேல் சிகிச்சைக்காக கொடுங்கல்லூரில் தனியார் மருத்துவமனையில் சிறுவனை சிகிச்சைக்காக அனுமதித்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி அஷ்பாக் பரிதாபமாக உயிரிழந்தான். இந்த சம்பவம் குறித்து கய்யமங்கலம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

அரசு பேருந்தில் சேதமடைந்த

பிளைவுட் பலகையை மாற்ற பயணிகள் கோரிக்கை

பந்தலூர், ஏப்.21: கூடலூர் அரசு போக்குவரத்துக்கழக கிளையில் இருந்து கொளப்பள்ளி அய்யங்கொல்லி வழித்தடத்தில் இயக்கப்படும் பேருந்தில் காலை, மாலை பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்கள், அரசு மற்றும் தனியார் துறைகளில் பணியாற்றும் பணியாளர்கள், பொதுமக்கள் பயணம் செய்து வருகின்றனர். இந்த பகுதியில் வெயில் மழை காலங்கள் என சுழற்சி முறையில் இயங்குவதால் பேருந்து சக்கரத்தின் பகுதிகளில் சேறும் சகதியும் படிந்து காணப்படுகிறது. இதனால் பேருந்தின் பயணிகள் நிற்கும் மேற்பரப்பில் உள்ள பிளைவுட் பலகைகள் நீரில் நனைந்து ஊறி சேதமடைந்து காணப்படுகிறது. இந்த பேருந்தில் முன் பக்க சக்கரத்திற்கு மேற்பகுதியில் பலகை ஊறி சேதமடைந்து அரிப்பு ஏற்பட்டு உடைந்து ஓட்டை விழுந்து காணப்படுகிறது.

இந்த பலகை முழுவதும் சேதமடைந்து உடைந்து விழுந்தால் படிக்கட்டுக்கு முன் இருக்கையில் அமர்ந்து வரும் பயணிகள் பாதிக்கப்படுவார்கள். நேராக கீழே விழும் அபாயம் உள்ளது. எனவே இந்த பேருந்தில் பயணிக்க கூடிய பயணிகளின் பாதுகாப்பு கேள்விக்குறியாக உள்ளது. ஆகவே அரசு போக்குவரத்துக்கழகம் பேருந்தில் பழுதடைந்த பலகைகளை மாற்றி புதிய பலகைகளை அமைக்க வேண்டும் எனவும், தொடர் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு இதுபோன்ற குறைபாடுகளை நீக்கி பாதுகாப்பான முறையில் பேருந்துகள் இயக்க வேண்டும் எனவும் பயணிகள் வலியுறுத்தி உள்ளனர்.

மசினகுடியில் துப்புரவு முகாம்

கூடலூர், ஏப்.21: தமிழ்நாடு முதல்வர் மற்றும் துணை முதல்வர் உத்தரவுப்படி தமிழகம் முழுவதும் அரசு அலுவலக வளாகங்களில் நடைபெறும் தீவிர துப்புரவு பணிகளின் ஒரு பகுதியாக மசினகுடி ஊராட்சி பகுதியில் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மசினகுடி ஊராட்சி அலுவலக வளாகங்களில் நடைபெற்ற இந்த துப்புரவு பணிகள் கூடுதல் கலெக்டர் கௌசிக் தலைமையில் நடைபெற்றது.

இதில் ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் ஸ்ரீதர், சலீம், மசினகுடி ஊராட்சி செயலர் மற்றும் தூய்மை பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

இதேபோல் மாவனல்லா பகுதியில் பொது இடத்தில் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இப்பகுதிகளில் உள்ள வியாபார நிலையங்கள், பெட்டிக்கடைகள், உணவகங்கள் ஆகியவற்றில் துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு மக்கும் மற்றும் மக்காத கழிவுகளை பொது இடங்களில் கொட்டுவதை தவிர்த்துக் கொள்ளவும், ஊராட்சியில் இயங்கி வரும் குப்பை சேகரிக்கும் வாகனங்களில் ஒப்படைத்து தூய்மையை பாதுகாக்க ஒத்துழைக்கவும் அறிவுறுத்தப்பட்டது.

பாஜவுடன் கூட்டு சேர்ந்து

அதிமுக தமிழ்நாட்டிற்கு செய்த துரோகங்களின் பட்டியல்

▶ பாஜகவுடன், கூட்டு சேர்ந்து அதிமுக தமிழ்நாட்டிற்கு செய்த துரோகங்களை பட்டியலிட்டு திமுக சார்பில், நீலகிரி மாவட்ட திமுக பொறுப்பாளர் கே.எம்.ராஜூ தலைமையில் பொதுமக்களிடம் துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டது.

ஊட்டி, ஏப்.21: பாஜவுடன், கூட்டு சேர்ந்து அதிமுக தமிழ்நாட்டிற்கு செய்த துரோகங்களை பட்டியலிட்டு நீலகிரியில் திமுக சார்பில் மாவட்ட திமுக பொறுப்பாளர் கே.எம். ராஜூ தலைமையில் துண்டு பிரசுரங்கள் பொதுமக்களிடம் விநியோகிக்கப்பட்டது.

பாஜகவுடன், எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அதிமுக கூட்டு சேர்ந்து தமிழ்நாட்டிற்கு செய்த துரோகங்களை பட்டியலிட்டு திமுக சார்பில் துண்டு பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது. இந்த துண்டு பிரசுரங்கள் நீலகிரி மாவட்ட திமுக தகவல் தொழில்நுட்ப பிரிவு மற்றும் வர்த்தகர் அணி சார்பில் மாவட்ட திமுக பொறுப்பாளர் கேஎம் ராஜூ தலைமையில் ஊட்டி ஏடிசி மற்றும் தற்காலிக மார்க்கெட் வளாகத்தில் பொதுமக்கள், வணிகர்களிடம் விநியோகிக்கப்பட்டது. இந்நிகழ்வில் மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் ரகமத்துல்லா வரவேற்றார். மாவட்ட அவை தலைவர் போஜன், மாவட்ட துணை செயலாளர் ரவிகுமார், நகரமன்ற தலைவர் வாணீஸ்வரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேலும் நிகழ்வில், ஒன்றிய பாஜகவுடன் சேர்ந்து அடிமை அதிமுக நீட் தேர்வை தமிழகத்தில் அனுமதித்து மாணவ, மாணவிகளின் உயிரை பறித்தது, மூன்று வேளாண் சட்டத்திற்கு ஆதரவு, சிறுபான்மை மக்களுக்கு எதிரான சிஏஏ, சட்டத்திற்கு ஆதரவு, மின்சார கட்டண உயர்வுக்கு காரணமான உதய் மின் திட்டத்திற்கு ஆதரவு என இதுபோன்ற மேலும் பல்வேறு பாதகங்களுக்கு அதிமுக துணை போயுள்ளது.

இதுமட்டுமின்றி இந்தி திணிப்பு, நிதிப்பகிர்வில் பாரபட்சம், கல்வி நிதி மறுப்பு, தொகுதி மறு சீரமைப்பு என பாஜக அரசின் துரோகங்களுக்கு துணை நின்று கூட்டணி அமைத்துள்ள அடிமை அதிமுகவின் முகத்திரையை கிழித்து விரட்டி அடிக்க வேண்டும். வஞ்சக பாஜக - துரோக அதிமுக கூட்டணியிடம் இருந்து தமிழ்நாட்டை பாதுகாப்போம் என்னும் வாசகங்கள் அடங்கிய துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டது.

திமுக துண்டு பிரசுரம் விநியோகம்

இந்நிகழ்ச்சியில் மாவட்ட அமைப்பாளர்கள் காந்தன் ரவி, எல்கில் ரவி, இளைஞர் அணி துணை அமைப்பாளர் நாகராஜ், மாவட்ட பிரதிநிதி கார்த்திக், நகரமன்ற கவுன்சிலர்கள் ரமேஷ், விஷ்ணு, கஜேந்திரன், ரகுபதி, தொமுச மாவட்ட கவுன்சில் செயலாளர் ஜெயராமன், மாவட்ட துணை அமைப்பாளர்கள் கணபதி, விஜயகுமார், ஜெகதீசன், சந்தீப், வெங்கடேஷ், குமார், பாரூக், நடனக்குமார், சிவகுமார், கழக நிர்வாகிகள் குரூஸ், முஸ்தபா, மகேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட ஐடி விங் ஒருங்கிணைப்பாளர் மணிகண்டன் நன்றி கூறினார்.

மாணவர்களுக்கு தண்ணீர் பாட்டில் வழங்கல்

கூடலூர், ஏப்.21: தேவர் சோலை பேரூராட்சிக்குட்பட்ட மச்சிக்கொல்லி மட்டம் பகுதியில் இயங்கி வரும் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் படிக்கும் 51 மாணவ, மாணவியருக்கு மச்சிக்கொல்லி மட்டம் எம்ஓய்எஸ் கிளப் சார்பில் தண்ணீர் எடுத்துச் செல்லும் வகையில் இலவசமாக பாட்டில்கள் வழங்கப்பட்டது.

கிளப் தலைவர் கண்ணன் (எ) மனு மற்றும் உறுப்பினர்கள் இதனை வழங்கினர். கோடைக்காலத்தில் வெயில் அதிகரித்து வரும் நிலையில் பள்ளிக்கு நடந்து வந்து செல்லும் மாணவ, மாணவியர் தங்களது பைகளில் எப்போதும் தண்ணீர் வைத்து பயன்படுத்தும் வகையில் இந்த தண்ணீர் பாட்டில்கள் வழங்கப்பட்டதாக தெரிவித்துள்ளனர்.

▶ மச்சிக்கொல்லி மட்டம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி மாணவர்களுக்கு தண்ணீர் எடுத்து செல்லும் வகையில் இலவச பாட்டில்கள் வழங்கப்பட்டன.

TATA

டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

பதிவு முகவரி: 11,ஆவது தளம், பிளாக் A, பெனின்சுலா கார்ப்பரேட் பூங்கா, கண்பத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை – 400013.
கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், 1,ஆவது தளம், நூற்றாண்டு சதுக்கம், # 6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை – 600 024.

அசையாச் சொத்து விற்பனை அறிவிப்பு

(கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002-ன் விதி 8(6) மற்றும் விதி 9(1) கீழ்)

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002-ன் விதி 8(6) மற்றும் விதி 9(1) விதிமுறைபடி பத்திரமாக்கல் மற்றும் நிதி சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனை, 30 நாள் விற்-முன் அறிவிப்பு

இங்கு மேலும் பொதுமக்களுக்கும் பொதுவாக மேலும் கீழுள்ளவர்கள் மற்றும் உப-கடன்தாரர், அல்லது அவரும் சட்டப்படியான வாரிசுகள்/பிரதிநிதிகள் (கடன்தாரர்கள்) ஆகியோருக்கு குறிப்பாக வழங்கப்படும் அறிவிப்பாவது, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிட். (TCHFL) நிறுவனத்திடம் அடமானம் வைக்கப்பட்ட, TCHFL நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் வரையறை செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்துகளது, கீழே குறிப்பிட்ட கடன்தாரர் மற்றும் உப-கடன்தாரர்களிடமிருந்து நிலுவையிலுள்ள தொகைகளை மீட்பதற்காக 'உள்ளது உள்ளபடித்தில்' & 'உள்ளது உள்ளவாறு' மேலும் 'உள்ளது எதுவோ அது' மற்றும் 'எந்த உத்தரவாதமும் இல்லாத' அடிப்படையில் 22-05-2025 முதல் விற்பனை செய்யப்பட உள்ளது. இங்கு விவரிக்கப்பட்ட மற்றும் முன்வைப்புத்தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இதன்மூலம் வழங்கப்படும் அறிவிப்பாவது, விற்பனை ஒத்தி வைப்பு விற்பனை நிபந்தனை எதும் இல்லாமல்சத்தில், மேற்கூறிய கடனீட்டுச் சொத்து சொத்து ஆகிய மேற்கூறிய 22-05-2025 தேதியில் பிற்பகல் 2.00 மணிக்கு பின்-ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். பின்-ஏலத்தில் பங்கேற்பதற்கான முன்வைப்புத்தொகை கேட்பு வரைபோலை அடங்கிய முத்திரையிடப்பட்ட உறையானது கிளை முகவரி டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், 1,ஆவது தளம், நூற்றாண்டு சதுக்கம், # 6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை – 600 024 இடத்தில் 21-05-2025 அன்று மாலை 5.00 மணி வரை அல்லது அதற்கு முன்பாக TCHFL நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்ட வேண்டும்.

கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்து விவரங்களின்படி கடனீட்டுச் சொத்து அசையாச் சொத்தானது 'உள்ளது உள்ளபடித்தில்' எனும் நிபந்தனையின் மூலம் விற்பனை செய்யப்ட உள்ளது.

ப. எண்	கடன் கணக்கு எண்	கடன்தாரர்(கள்) / உப-கடன்தாரர்(கள்) / சட்டப்பூர்வ வாரிசு(கள்) / சட்டப்பூர்வ பிரதிநிதி / காப்பீட்டாளர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	நிர்ணய விலை	முன்வைப்புத் தொகை	கலந்தாய்வு மனை	நிறுவனத் தொகை
1.	TCHIN080600100147075 & TCHHL080600100146973	திரு. முருகேசன் K திருமதி தமிழ்செல்வி .M	TCHIN080600100147075 என்ற ஒப்பந்த எண்ணின்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிதியைத் தொகை ரூ.94,878/- மற்றும் TCHHL080600100146973 என்ற ஒப்பந்த எண்ணின்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிதியைத் தொகை ரூ.17,52,109/- மொத்தம் ரூ.18,46,987/- 4 07-11-2024	ரூ.21,72,150/- (ரூபாய் இருபத்தொரு லட்சத்து எழுபத்தைந்தாயிரத்து நூற்று ஐம்பது மட்டும்)	ரூ.2,17,215/- (ரூபாய் இரண்டு லட்சத்து பதினெழாயிரத்து இருநூற்று பதினைந்து மட்டும்)	மனைகள்	TCHIN080600100147075 என்ற ஒப்பந்த எண்ணின்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிதியைத் தொகை ரூ.1,87,914/- செலுத்தும் ரூ.1,984688/- 14.04.2025 நேர்படி

அசையாச் சொத்தின் விவரம்: துலைத்து துண்டு மற்றும் பகுதிகள் கொண்ட 1,ஆவது இனம் வீட்டு மனை இட எண் Evs- B 5454 40.00 சதுர மீட்டர் – திருப்பூர் மாவட்டம், திருப்பூர் பதிவு மாவட்டம், தொட்டிபாளையம் சார்பதிவு அலுவலக வட்டாரம், திருப்பூர் தெற்கு நகரம், முனிசிபாலிட்டி கிராமத்தில் சேர்த்த கதவு எண் 180 பாகம், திருப்பூர் வீட்டுவரி வரியம் வேலூர், முனிசிபாலிட்டி ஒப்பந்த வேலூர், Evs B- 5453, மனை இடத்தின் பரப்பளவு 20.00 சதுர மீட்டர் மொண்ட, வீட்டு மனை இடம் எண் 182 பாகம், திருப்பூர் வீட்டுவரி வரியம் வேலூர், முனிசிபாலிட்டி ஒப்பந்த வேலூர், Evs B- 5453, மனை இடத்தின் பரப்பளவு 20.00 சதுர மீட்டர் மொண்ட, வீட்டு மனை இடம் எண் Evs B 5453-இன் கிழக்கு பக்கச் சொத்து, தெற்கு: மனை இட. எண் 5448, தெற்கு: 1,ஆவது இனத்தில் உள்ள சொத்து, மேற்கு: எல்லைகளுக்கிடையே உள்ள அளவீடு: கிழக்கு –மேற்கான வடக்குப் பக்கம் 4.0 மீட்டர், கிழக்கு – மேற்காகத் தெற்குப் பக்கம் 4.0 மீட்டர், தெற்கு – வடக்காக கிழக்குப் பக்கம் 10.0 மீட்டர், தெற்கு வடக்கான மேற்குப் பக்கம் 10.0 மீட்டர், தொத்து பரப்பளவு 40.00 சதுர மீட்டர் மொண்ட, வீட்டு மனை இடம் மற்றும் வரைபடமான வழிப்பாதை, பொதுச் சாலை மிதான உரிமைகள், பொது உரிமைகள் முதலானவை உட்பட... கதவு எண் 180/1a1b1, பட்டா எண் 848, 2,ஆவது இனம் வீட்டு மனை இட. எண் EWS B 5453 20.00 சதுர மீட்டர் – திருப்பூர் மாவட்டம், திருப்பூர் பதிவு மாவட்டம், தொட்டிபாளையம் சார்பதிவு அலுவலக வட்டாரம், திருப்பூர் தெற்கு நகரம், முனிசிபாலிட்டி கிராமத்தில் சேர்த்த கதவு எண் 180 பாகம், திருப்பூர் வீட்டுவரி வரியம் வேலூர், முனிசிபாலிட்டி ஒப்பந்த வேலூர், Evs B- 5453, மனை இடத்தின் பரப்பளவு 20.00 சதுர மீட்டர் மொண்ட, வீட்டு மனை இடம் எண் Evs B 5453-இன் கிழக்குப் பக்கச் சொத்து, தெற்கு: மனை இட. எண் 5448, தெற்கு: 1,ஆவது இனத்தில் உள்ள சொத்து, மேற்கு: எல்லைகளுக்கிடையே உள்ள அளவீடு: கிழக்கு – மேற்காக வடக்குப் பக்கம் 2.0 மீட்டர், கிழக்கு – மேற்காகத் தெற்குப் பக்கம் 2.0 மீட்டர், தெற்கு – வடக்காக கிழக்குப் பக்கம் 10.0 மீட்டர், தெற்கு வடக்கான மேற்குப் பக்கம் 10.0 மீட்டர், தொத்து பரப்பளவு 20.00 சதுர மீட்டர் மொண்ட, வீட்டு மனை இடம் மற்றும் வரைபடமான வழிப்பாதை, பொதுச் சாலை மிதான உரிமைகள், பொது உரிமைகள் முதலானவை உட்பட... கதவு எண் 180/1a1b1, பட்டா எண் 848, 1,ஆவது இனம் 40.00 சதுர மீட்டர், 2,ஆவது இனம் 20.00 சதுர மீட்டர், மொத்தம் 60.00 சதுர மீட்டர்.

ஏலத்தில், பொதுவாக பொதுக்கள் தனிப்பட்ட நபர்கள் ஏலம் பங்கேற்கலாம் சமர்ப்பிக்க அழைக்கப்படுகின்றனர். இந்த விற்பனைத் தொடர்பாக ஏதேனும் பணியைச் மேல்கொள்ளுக்கும் அதுவரை அல்லது மீற நபர், விற்பனையில் அசையாச் சொத்தில் ஏதேனும் உரிமைகளைக் கைப்பற்ற அல்லது கைப்பற்ற முயற்சிக்க தேவையான அல்லது மறுதலையாக வெப்சைட் அளிக்கலாகாது.

விற்பனையானது கடனீட்டுச்சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இல் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் கீழுள்ள மேற்கொண்டு இந்தவிதிகளுக்கு உட்பட்டது ஆகும்.

குறிப்பு: பின்-ஏலம் ஆனது http://bankauctions.in/ வலைதளம் மூலம் 22-05-2025 அன்று பிற்பகல் 2.00 மணி முதல் 3.00 மணிக்குள் நடைபெறும். பின்னர் நடைபெறும்.

விதிமுறைகள் மற்றும் நிபந்தனை:

1. இங்கே கீழே ஷரட்டு வடிவத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் கீழே வைக்கொடுக்கப்பட்டுள்ளன, ஆனால் கீழே வைக்கொடுக்கப்பட்டவை இந்த அறிவிப்பில் ஏதேனும் பிழை, தவறான அறிக்கை அல்லது விடுபடுதலுக்கு பொறுப்பேற்கவல்லவர். எவ்வாறாயினும் ஏதேனும் பூரண ஏழுமாறாக, அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பப்படிமைக்கு உட்பட்டு அசையாச் சொத்து மீண்டும் ஒருமுறை வைத்திருக்க வைக்கப்படும். 2. அசையாச்சொத்து நிலையமிலிருக்கு முறையாக விற்பனை செய்யப்படமாட்டாது. 3. ஏலம் உயர்த்தும் தொகை 10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) ஆகும். 4. சொத்து கொள்முதலுக்காக சமர்ப்பிக்கப்படும் அனைத்து ஏலப்புள்ளிகளும் கீழை முகவரியில் மாற்றத்தக்க வகையில் "டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிட்." பெயரிலான கேட்பு வரைபோலை மூலம் மேற்குறியிட்டபடியான முன்வைப்புத் தொகையைப் பிணைக்கப்பட்டிருக்கவேண்டும். மேலும், கொற்றியோரு ஏலதாரர்களுக்கு ஏலம் முடிந்த பிறகு கேட்பு வரைபோலைகள் திருப்பியளிக்கப்படும், NEFT/RTGS/IMPS வழியே முன்வைப்புத்தொகை செலுத்துவதற்கு, அதிகாரப்பூர்வ அதிகாரியை தொடர்பு கொள்ளவும். 5. உயர்தட்டச் ஏலதாரர், ஏலப்புள்ளி அளிக்க அவர் எப்போதும் சட்டப்பூர்வத் தகுதியுடையவராவர். மேலும் ஏலப்புள்ளித் தொகை திரையை விலைக்குக் குறைவில்லாமலோ என்பதைப் பொறுத்து வெற்றியை ஏலதாரரை அதிகாரப்பூர்வ அதிகாரியால் ஏற்கப்பட்டு, அளிக்கப்பட்ட விலை முற்றாக்குவது என தெரிவாகக் காணப்படுகையில் உயர்தட்டச் ஏலப்புள்ளியை ஏற்க மறுப்பது அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவரிமை முடிவினைப் ஆகும். 6. பதிவுக் காரணங்களுக்காக, விற்பனை ஒத்தி வைக்கும் / நிறுத்தும் என்பது அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவரிமை முடிவினைப் ஆகும். 7. முன் அனுமதிக்கியிருப்பே 14-05-2025 அன்று முற்பகல் 11 மணி முதல் மாலை 5.00 மணிக்குள் அசையாச் சொத்தினை பார்வையிடலாம். 8. பெற்றிய ஏலதாரரை அதிகாரிக்கப்பட்ட நபர். இங்கிற அதிகாரப்பூர் பிறகு உடனடியாக, 24 மணி நேரத்திற்குள் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் முன்வைப்புத் தொகை உள்ள விலைக்காக கொள்முதல் பணம்/ ஏலப்புள்ளித் தொகையில் இருப்பதாகிய சதவீதத்தைச் செலுத்த வேண்டும் மேலும் இங்கிலும் செலுத்தத் தவறினால், சொத்து உடனடியாக பதிவை ஏலத்திற்கு வைக்கப்படும் / ரணி ஒப்பந்தம் மூலம் விற்கப்படும். 9. மேற்குறியபாடு முற்றுப்பட்ட தொகை செலுத்தப்பட்டுவிட்டால், செலுத்த வேண்டிய கொள்முதல் பணத்தின் மீதிற்தொகையானது சொத்து விற்பனை உறுதியான தேதியிலிருந்து, இந்த நாளை தவிர்த்து, 15 ஆம் நாளில் அல்லது அதற்கு முன்பாக, அல்லது 15,ஆவது நாள் ஞாயிற்றுக்கிழமை அல்லது பிற விடுமுறையாக அமைந்தால், 15வது நாளுக்கும் பிறகான முதல் அலுவலக நாளில் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் கொள்முதலாளரால் செலுத்தப்ட வேண்டும். 10. மேற்குறியபட்ட காலத்திற்குள் பணப்பட்டுவாடாச் சந்தேகம் செலுத்து பதிவாக ஏலதாரர்கள், சொத்து பதிவாக